21 SEP 1991

# இக்கட்டான நிலையில் இலங்கை அரசு - இந்திய முன்னுள் வெளியுறவு செயலர் கூறுகிறார்

[சென்னை]

இலங்கைப்பிரச்சனை தீர்வில் எதனையும் செய்யமுடியாத தொருநிலையில் இலங்கைஅரசு திக்குமுக்காடி வருவதாக முன்னுள் இந்தியவெளியுறவுச் செயலர் திரு. எரிக் கொன்சால்வஸ்

(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆவணி 23 இதழ்: 209
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 8-9-1991

# உயிராபத்தென ஜனதிபதி அச்சம்

[லண்டன்]

தமது உயிருக்கு ஏதும் ஆபத்து ஏற்படலாமென ஜனதிபதி திரு. பிரேமதாசா அச்சம் தெரிவித்துள்ளார். நேற்று நடைபெற்ற ஐ தே. கட்சி அங்கத்தவர் மாநாட்டில் ஜனதிபதி உரை

[4ம் பக்கம் பார்க்க]

# மணலாறு மோதல் 15 ராணுவம் பலி

(கொழும்பு)

மணலாறு மாவட்டத்திலுள்ள மதவஞ்சேனை பகுதியில் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் கடும மோதல்கள் நடைபெற்றன.

(4ம் பக்கம் பார்க்க)

## ★ அகதிகள் விவகாரம்:

# இந்தியா விதித்த நிபந்தனைகளை இலங்கை அரசு நிராகரித்தது!

## தொடர்ந்தும் பேச முயற்சி?

[கொழும்பு]

**இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு திருப்பி அனுப்புவது தொடர்பாக இந்திய அரசு விதித்த நிபந்தனைகளை ஏற்கமுடியாதென இலங்கை அரசு நிராகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது:

இந்தியாவில் தஞ்சம் புகுந்திருக்கும் அகதிகளில் ஒருபகுதியினர் இலங்கை திரும்புவதற்கு இந்திய அரசுக்கு விண்ணப்பம் செய்திருந்தனர். இதையடுத்து அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவதற்காக கூட்டப்பட்ட மாநாடு இணக்கம் எதுவும் காணப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இம்மாநாடு கொழும்பில் இலங்கை வங்கி தலைமைக காரியாலத்தில் நடைபெற்ற போது, இந்தியா இவ்விடயத்தில் முன்வைத்திருக்கும் நிபந்தனைகளை ஏற்கமுடியாதெனவும், இரு நாடுகள் இணக்கம் காணும்வரை இந்நடவடிக்கைகளை தாமதப்படுத்துமாறும் புனர்வாழ்வு அமைச்சு கோரியுள்ளது.

இந்தியா இலங்கை அகதிகளை பாதுகாப்பான இடத்தில் தங்கவைக்க வேண்டும் அவர்கள் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்வரை இந்திய

(4-ம் பக்கம் பார்க்க)

## 7-வது மாடியிலிருந்து குதித்து இந்திய அமைதிப்படை ஜெனரல் தற்கொலை

[புதுடில்லி]

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளில் கடமையாற்றிய இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த ஜெனரல் ஒருவர் 7வது மாடிக் கட்டிடத்திலிருந்து குதித்து தற்கொலைசெய்துள்ளார்.

மேஜர் ஜெனரல் ஏ. எம். மாலிக் என்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவரென அடையாளம் காணப்பட்டுள்ளது.

டில்லியிலுள்ள இராணுவத்

[4ம் பக்கம் பார்க்க]

## நீதி கோரி உச்ச நீதிமன்றில் மனு

[கொழும்பு]

ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்தும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்திலிருந்தும் அகற்றப்பட்ட எட்டு எம்.பி.க்களும் தங்களை கட்சியிலிருந்தும் எம்.பி. பதவிகளிலிருந்தும் நீக்

(4-ம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு எதிராக லண்டனில் கூட்டம்

(லண்டன்)

இலங்கை அரசுக்கு எதிராக கடந்த செவ்வாய்க்கிழமை லண்டனில் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றுள்ளது.

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட சட்டத்தரணி லியனுராய்ச்சிகேயின் 3-ஆம் வருட ஞாபகார்த்தமாக இக்கூட்டம் நடைபெற்றது. இதனை லண்டனிலுள்ள மனித உரிமை இயக்கத்தைச் சார்ந்தவர்களும் அரசு எதிர்ப்பாளர்களும் நடாத்தினர்.

(4ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாமீதான தாக்குதல் இலங்கைக்கு பேரழிவாகும்

(சென்னை)

யாழ். குடாநாட்டை கைப்பற்றும் ஒரு முயற்சியில் படைகள் ஈடுபடுமானால் இலங்கைக்கும் அந்நாட்டு மக்களும் பேரழிவு ஒன்று ஏற்படும் என்பதை அது நிரூபிக்கும் என கடந்த புதன்கிழமை புது கொழும்பில் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்ததாக

(4ம் பக்கம் பார்க்க)

## இந்தியா அங்கீகாரம்

[லண்டன்]

தனியரசுகளாக பிரகடனம் செய்துள்ள போல்டிக் குடியரசுகளை இந்தியா அங்கீகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

[மா]

## முல்லை-மணலாறு காட்டில் கடும் யுத்தம் தொடர்கிறது

[யாழ்ப்பாணம்]

மணலாறு மாவட்டத்தில் ஒரு வாரத்துக்கு மேலாக நித்திகைக்குளம்காட்டுப்பகுதியில் தரையிறக்கப்பட்ட படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் கடும் யுத்தம் இடம்பெற்று வருகிறது.

முல்லை-மணலாறு மாவட்டத்தின் கரையோரத்துக்கு இடையிலுள்ள பத்து மைல் நிலப் பரப்பைக் கொண்ட அடர்த்தியான காடுகளையும், பழைய அரச குகைகளையும் கொண்ட காட்டுப்பகுதியை மீட்பதற்காகப் பெருந் தொகையான படையினர் குவிக்கப்பட்டும் முன்னேற முடியாதநிலையில் இராணுவம் பலத்த இழப்புக்களைச் சந்தித்து வருவதாகவும் ஒரு சில மைல்கள் வரை முன்னேற முயற்சி செய்யும் படையினர்

[4ம் பக்கம் பார்க்க]

## ராம் - தொண்டா சந்தித்து பேசுவர்

[சென்னை]

இந்தியா சென்றுள்ள அமைச்சர் திரு. எஸ்.தொண்டமான் 'புரண்ட்லைன்' ஆசிரியர் திரு. ராமை சந்திக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில்கொழும்புவந்த

(4ம் பக்கம் பார்க்க)

## கண்டனக் கூட்டம் நடத்த காமினி, லலித் முடிவு

[கொழும்பு]

ஐ. தே. கட்சியிலிருந்துவிலக்கப்பட்டு எம். பி. பதவியை இழந்துள்ள அதிருப்தியாளர்கள் குழு கண்டனக் கூட்டங்களை நடாத்தவுள்ளதாக திரு. காமினி திஸநாயக்கா பி.பி.ஸி.க்கு தெரிவித்துள்ளார்.

இக்கூட்டங்கள் நாளை முதல் ஆரம்பமாகுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## க.பொ.த. பரீட்சை முடிவுகள் விரைவில்

(யாழ்ப்பாணம்)

1990 ம் ஆண்டு க. பொ. த. [உயர்தர] விசேட பரீட்சை முடிவுகள் வெகுவிரைவில் அனுப்பிவைக்கப்படுமென பரீட்சை ஆணையாளர் யாழ். கல்விப்பணிப்பாளருக்கு உறுதியளித்துள்ளார்.

செயல்முறைப் பரீட்சை நடைபெறாத பாடங்களைத் தவிர்ந்த ஏனைய பாடங்களுக்கான பரீட்சை முடிவுகள் அரசுசார்பற்ற நிறுவனங்கள்

[4-ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## தேவை

புடவை வியாபாரத்தில் அனுபவமுள்ள பெண் விற்பனையாளர் தேவை (Sales Girl). தொடர்பு: ஏசியன் ரெக்ஸ்ரைல்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி சந்தி (சி 5282)

## விற்பனைக்கு

பாவித்த மரங்கள் சிற, முகட்டுசிற, கதவுகள், நிலைகள் 2 x 2 நெற்பிறேம் பலகைகள், மேசை, கதிரை, அலுமாரி, சோக்கேஸ், கடைக்குரிய தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். (சி 5279)

## மணமக்கள் தேவையா

எம்மிடம் ஏராளமான மணமக்கள் இருக்கிறார்கள் ஞாயிற்றுக்கிழமையில் சந்திக்கலாம். மங்கள ஏஜன்சி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணம். (சி-5295)

## தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை விமலச்சந்திரன் காரைநகர் என்பவருடைய அடையாள அட்டை இல 591031392 V நல்லூருக்கும் யாழ்ப்பாணரவுணுக்கும் இடையில் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் இல. 219, பத்மநாதன் நாவலர் வீதி யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-5293)

## அக்குபஞ்சர், ஹோமியோபதி சிகிச்சை

கொழும்பு தெற்கு அரச வைத்தியசாலையில் கடமையாற்றும் விரிவுரையாளரினால் நாரிப்பிடிப்பு, மூட்டு வாதம், தொய்வு, கபாலகுத்து தோல் வியாதிகள், நரம்பு தொடர்பான தீராத நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சையளிக்கப்பட்டுவருகிறது. மேலதிக விபரங்களுக்கு இல. 121/2 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். இல. 95, யாழ். வீதி, மானிப்பாய். திருமதி சத்தியமூர்த்தி, கருவேலடி லேன், கொக்குவில். (சி 5280)

## ஆண்டு 5, 4

ஆண்டு 5ற்கு புலமைப்பரிசில்/அனுமதி மாதிரி வினாத்தாள்கள் ஒவ்வொரு மாதத்திலும் 1ம், 3ம் ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஆண்டு 4ற்கு 4ம் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வெளியிடப்படும். அதனைப் பெற்று விடைஎழுதித்தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். 219. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-5296]

## தவறிவிட்டது

வெள்ளிக்கிழமை இரவு தாண்டிக்குளத்தில் இருந்து கேரதீவிற்கு வந்த வானில் எனதுநீலநிறபயணப்பைதவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். திருமதி சி. சிவச்செல்வி, 49/5, யாழ்றோட், யாழ்ப்பாணம். (சி-5598)

## COMPUTER CLASSES

★ BASIC LANGUAGE ★ LOTUS 1, 2, 3.
★ d BASE III ★ WORD STAR

ஆரம்பம்: 9-9-1991 (வார நாட்கள்)
ஆரம்பம்: 14-9-1991 (வார இறுதி நாட்கள்)

[விசேட செய்முறைப் பயிற்சியுடன் துரித பயிற்சி நெறி]

விபரங்கட்கு:

**வட இலங்கை**
**தொழில்நுட்ப கல்லூரி**
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE;**
14, St Peters Lane
Hospital Road - Jatfna;

[எ-1564]

## தொழிற் பயிற்சிகள்

★ **றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக் றிப்பியரிங்**
சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோடெக் திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 5 மாதம்

★ **றீவைண்டிங்**
மோட்டர், மின்விசிறி, ரான்ஸ்போமர், டைனமோ, பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம்

★ **எலக்றிக்கல் வயறிங்**
வீட்டு மின்சார வேலை, மின்சார பொருட்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படும்
காலம்: 3 மாதம்

மீண்டும் வகுப்புகள் ஆரம்பம்:
09-09-1991 (கிழமைநாட்கள்)
14-09-1991 (சனி, ஞாயிறு)

**JAFFNA TECHNICAL INSTITUTE**
ஸ்ரான்லி வீதி,
(றெயில்வே கடவை அருகாமை)
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- முன்னர் குறிப்பிட்டதுபோல் T. V. பரீட்சை 06-09-1991 2 மணிக்கு நடைபெறும். [எ-1555]

உ

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி வருடம் ஆவணி மாதம் 24-ம் திகதி (9-9-1991) திங்கட்கிழமை காலை 9-37 மணி முதல் 10-39 மணிவரை அன்று உத்திரம் நட்சத்திரமும், பிரதமை திதியும், சித்தயோகம், துலாம் லக்கினமும் கூடிய சுப முகூர்த்தத்தில்;

| | |
|---|---|
| எமது சிரேஷ்ட புத்திரன்<br>திருநிறைசெல்வன்<br>**கனகேஸ்வரன் (கண்ணன்)**<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>**மங்கையர்க்கரசி (மங்கை)**<br>அவர்களுக்கும் |

இறைவன் திருவருளால் நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் திருமணம் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள், தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

திருமதி ப. கனகரெத்தினம் (செட்டியார்)
140, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி த. செல்லத்துரை
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

[இரு வீட்டார் அழைப்பிதழ்]

★ 9-9-91 அன்று மாலை 4-00 மணி முதல் 6-00 மணி வரை மணமகன் இல்லத்தில் வரவேற்பு உபசாரம் நடைபெறும். (சி-5249)

உ

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் பிரசோற்பத்தி ஆண்டு ஆவணித் திங்கள் 26-ம் நாள் (11-09-1991) புதன்கிழமை முற்பகல் 10-51 மணி முதல் 11-21 மணிவரை வரும் பூர்வதிருதியை திதியும், சித்திரை நட்சத்திரமும் சித்த சுபயோகமும் விருச்சிக லக்னமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்;

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**ரகு**<br>[பங்காளர் ரவி அன் ராஜ் சில்க்ஸ்]<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறைசெல்வி<br>**காருணி**<br>அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு மணமகள் இல்லத்தில் திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் சுற்றமும் நட்புஞ்சூழ வருகை தந்து திருமணத் தம்பதிகளை வாழ்த்தியருளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் அன்புள்ள

திரு. திருமதி கந்தசாமிதுரை
(பங்காளர் ரவி அன் ராஜ் சில்க்ஸ்)
இல. 34, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திருமதி கா. சாமி
இல. 77/5, புங்கங்குளம் வீதி,
நவநீதன் ஒழுங்கை,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

[சி-5268]

1-ம் வருட

# நினைவஞ்சலி



அமரர்

**சிவப்பிரகாசம் அருணகிரிநாதன்**
(கால்நடை உத்தியோகத்தர் வட்டுக்கோட்டை)

ஆண்டவன் படைப்பு: 24-02-1966
வான் அரக்கன் அழிப்பு: 20-08-1990
திதி: 08-09-1991

எம் அன்புத் தெய்வமே உங்கள் பூதவுடல் அழிந்தாலும் வஞ்சமில்லா முகமும் கள்ள மில்லா வெள்ளை உள்ளமும் என்றென்றும் எம் இதயத்தை விட்டகலா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஓம் சாந்தி

உம் பிரிவால் வாடும்:
தாய், தந்தை: சிவப்பிரகாசம் - தர்மநாயகி
அக்கா: ச. கனகமலர்
அண்ணன்மார்: சி. லோகநாதன், சி. செல்வநாதன், சி. பரஞ்சோதிநாதன், சி. அருள்நாதன் (தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்)
தங்கை: சி. இந்திரமலர்
மைத்துனர்: வீ. சண்முகநாதன்
மருமக்கள்: ச. பிரசாந், துஷ்சாந், பிரசாந்தி
அண்ணிமார்: நளினி, அம்பிகா, மைதிலி
பெருமக்கள்: அஜேஜா, தர்சிகா, பிரகாஸ்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.

[எ-1562]

# 45- நாள் நினைவஞ்சலி



27-07-91 அன்று ஆனையிறவு இராணுவ முகாம் தகர்ப்பின் போது வீரமரணமடைந்த

வீரவேங்கை

## லெப்டினன் நிமலேந்திரன்

(பிரசன்ன)

[புலனாய்வுப் பிரிவு]

[தங்கவேல் செந்தில்குமாரன்]

தாயின் மடியில்: 21-09-1974 தமிழீழ மீட்பில்: 27-07-1991

வேரோடு விதைகளை வணங்குதல் செய்வோம்
தானை தலைவனின் மொழி கேட்டு
தமிழீழம் மலர்ந்திட நல் விதையானாய்
ஆனை இறவோடு போர் தொடுத்தே
அழியா புகழ் தனுக்கும் ஓர் உரமானாய்
நாளை மலர்ந்திடும் தமிழீழம் - அதன்
நம்பிக்கை வேர்களே! மண்ணில் உறைவீர்
வேலி வகுத்தாய் வேங்கைகள் முடிசூடும்;-புதை
வேரோடு விதைகளை - வணங்குதல்
தெய்வமாக போற்றிநிற்கும்

உமது பிரிவால் துயருறும்

அம்மா, அப்பா, அன்புத்தம்பி, அக்கா, தங்கை, மற்றும் மாமன்மார், மாமிமார், அன்ரிமார், ஐயையா, மற்றும் உறவினர்கள்

மு. தங்கவேல் நடராசா வீதி, [சிறீதரன் வீதி]
வல்வெட்டித்துறை (சி-5258)

# 102 ஆங்கில ஆசிரியர் பதவிகளுக்கு வெற்றிடம்

[வட்டுக்கோட்டை]

பண்டத்தரிப்பு கோட்டக் கல்விப் பிரிவிலுள்ள 10 கொத்தணிகளிலும் 102 ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாக பண்டத்தரிப்புக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ப சண்முகராசா அறிவித்துள்ளார்.

ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர்கள், ஓய்வுபெற்ற ஆங்கில தராதரமுடைய அரசாங்க உத்தியோகத்தர்கள் இந்த வெற்றிடங்களுக்கு வெற்றிடமுள்ள பாடசாலை அதிபர்களுக்கூடாக விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. [139]

### விசர்நாய்க்கடி தடுப்பூசி மருந்துக்கு

# பெரும் தட்டுப்பாடு

[யாழ்ப்பாணம்]

விசர்நாய்க்கடித் தடுப்பூசி மருந்தான ஏ. ஆர். வி. ஊசி மருந்து கடந்த இரு வாரங்களாக கிளிநொச்சி, யாழ். மாவட்டங்களில் உள்ள சகல வைத்தியசாலைகளிலும் முடிவடைந்துவிட்டதால் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர்.

அடுத்து வரும் கப்பலில் ஏ. ஆர். வி. மருந்துகள் மற்றும் குழந்தைகளுக்குரிய போலியோ ட்ரொப்ஸ் மருந்துகள் வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (56)

# சதாபிஷேக அழைப்பு

## மாவை ஐ. வைத்தியநாதக்குருக்கள்

(இராசாக்குருக்கள்)

அவர்களின் 80வது ஆண்டு பூர்த்தி வைபவம்

(சதாபிஷேகம்)

நிகழும் 10-09-1991 செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான கல்யாண மண்டபத்தில் நடைபெறத் திருவருள் கூட்டியுள்ளது ஆகவே அன்பர்கள் இதனை அழைப்பிதழாகக் கொண்டு சமுகம் தந்து வைபவத்தைச் சிறப்பிக்குமபடி கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் அன்புள்ள
மக்கள், மருமக்கள்.
ஐ. வை. சுப்பிரமணிய சர்மா
ஐ. வை. ஐயாச்சாமி சர்மா

மாவிட்டபுரம் சி-5274]

# பல்கலைக்கழக கல்லூரிகள்

(கொழும்பு)

மாகாண பல்கலைக்கழக கல்லூரிகள் நவம்பர் மாதம் முதல் இயங்கவிருப்பதாக பல்கலைக்கழக மானியக் குழுத் தலைவர் அர்ஜுன அலுவிகாரா தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்துக்குரிய பல்கலைக்கழக கல்லூரி வவுனியாவில் அமையவிருப்பது குறிப்பிடத்தக்கது [153]

# தற்கொலை

(யாழ்ப்பாணம்)

கடந்த மூன்று மாத காலத்திற்குள் ஆறுக்கும் மேற்பட்ட திருமணமாகாத இளம் யுவதிகள் மனநோயினால் அவஸ்தைப்பட்டுத் தற்கொலை செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, கோப்பாய், சாவகச்சேரி, கொக்குவில் ஆகிய பகுதிகளில் வசித்த யுவதிகளே தற்கொலை செய்தவர்களாவர்

இவர்களில் அநேகர், யாழ். போதனா வைத்தியசாலை மனநோய் சிகிச்சைப் பகுதியில் சிகிச்சை பெற்றவர்களாவர். (56)


# வெளிநோயாளர் பிரிவு இயங்கமாட்டாது

[மானிப்பாய்]

மானிப்பாயில் இயங்கும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப்பிரிவு இயங்க மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

வலி-வடக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடந்த நவம்பர் மாதத்திலிருந்து மானிப்பாய் கிறீன் தனியார் வைத்தியசாலை கட்டிடத்தில் இவ்வைத்தியசாலை இயங்கிவருவதனால் கிறீன் வைத்தியசாலையின் வருவாயில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவ்வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்ததைத் தொடர்ந்து இவ்வைத்தியசாலையின் சில பிரிவுகள் மூடப்படுகின்றன.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



வானூர்தி தாக்குதலுக்கு பலியான அன்பு நெஞ்சங்கள்



அமரர்
**கோபாலபிள்ளை இராசப்பா**

மண்ணில்: 11. 12. 1930
விண்ணில்: 09. 09. 1990

செல்வி
**இராசப்பா சித்திரா** B. Sc.

ஜனனம்: 13. 04. 1968
தாயக மரணம்: 08. 09. 1990

ஆண்டொன்று சென்றதால், இது உங்கள் நினைவலைகள்;

கண்ணிலே நீர் எதற்கு; காலமெல்லாம் அழுவதற்கு,
சொல்லிலே வீரம் எதற்கு; வாய்விட்டுப் புலம்புவதற்கு,
நெஞ்சம்தான் கலங்குதையா வாய்விட்டு அழுதுவிட்டேன்:
வஞ்சனையார் விஞ்சிவந்து குண்டுதனைப் போட்டனர்
ஐயா என்பேனே; சித்திரா என்று போட்ட குரல்...
உலகமே அதிர்ந்தது... வாழ்வே வரண்டதையா...
வாழ்வே மாயமடா... என்று பட்டினத்தார் சொன்னது
காலத்தின் நிகழ்வால் சரித்திரமாய் போனதடா,
அம்மாவும், அக்காவும் இங்கிருந்து புலம்புவது கேட்குமடா.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மகள்,
மருமகன், பேரன், றீற்ரு (பெறுமகள்).

கனடாவில் வசிக்கும்

பிரிவால் துயருறும்;
அம்மா, அக்கா,
அத்தான், பெறுமகன், உடன்பிறவாச் சகோதரி (றீற்ரு)

(சி 5272) 14, அன்ன சத்திர லேன், யாழ்ப்பாணம்.

# இராசி பலன்

08 09 1991
ஞாயிற்றுக்கிழமை
தமிழுக்கு ஆவணி 23

அமாவாசை மாலை 5.09 வரை; பூரம் பி. இ. 2. 40 வரை, இராகுகாலம் மாலை 4. 34 முதல் 6-04 வரை: சுப நேரம் காலை 9 04. முதல் 10 34 வரை சித்தாமிர்தயோகம்.

மேடம்: ஏமாற்றம், வயோதிபர் தொல்லை, பணச்செலவு

இடபம்:- கண்ணில்ரோகம் விதண்டாவாதம். குடும்ப பிரிவு.

மிதுனம்; பெண் உதவி, தொழில்சிறப்பு, தானதர்மம்.

கடகம்: குடும்பகஸ்டம், மனவேற்றுமை, அலைச்சல்.

சிங்கம்: குடும்பசந்தோஷம், தொழில் சிறப்பு, காரியசித்தி:

கன்னி: அகங்காரம், வேண்டாத தொல்லை, பணமுடை.

துலாம்: வாக்குவன்மை. வசதிஅதிகரித்தல், திருமண யோகம்.

விருச்சிகம்: விபரீதம், உறவினர் வருகை: குடும்பசுகம்,

தனுசு:- தொல்லைகள் அதிகரிப்பு, குடும்ப கஸ்டம், மறதி

மகரம்: மனைவியுடன் மூரண்பாடு. விதண்டாவாதம், வேதனை,

கும்பம்: காரியசித்தி, தொழில் முதலீடு, மனமகிழ்ச்சி.

மீனம்; பொருளாதார வசதி, புத்திரர் சிறப்பு, பயணங்கள்.

ஜோஸ்யர்

# லலித், காமினி உட்பட எண்மர் ஐ. தே. க.விலிருந்து நீக்கம்

[கொழும்பு]

ஐ. தே. க. விலிருந்து 8 உறுப்பினர்கள் வெளியேற்றம் செய்யப்பட்டனர் ஐ தே க யின் நிர்வாகக்குழுக் கூட்டம் தலைவர் ஆர். பிரேமதாசா தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கட்சியின் சட்ட ஒழுங்கு நடவடிக்கைக் குழுவினால் இவர்கள் நீக்கம் செய்யப்பட்டனர்.

கே. வின்சென்ட் பெரேரா லலித் அத்துலத்முதலி காமினி திஸநாயக்கா, ஈ. எம். பிரேமச்சந்திர, பிரேமரத்ன குணசேகரா, சமரவீர வீரவன்னி, சந்திரகங்கந்த, லக்ஸ்மன் செனிவரத்ன ஆகிய எட்டுப்பேருமே கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர்களாவார்கள்.

இவர்கள் கட்சியிருந்து நீக்கப்பட்டதினால் பாராளுமன்றத்தில் இவர்கள் வகித்து வந்த ஆசனங்கள் யாவும் காலியாக இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# வடபகுதி இளைஞர்களுக்கு கொழும்பில் கெடுபிடி

(கொழும்பு)

வடபகுதி இளைஞர்கள் கொழும்பிலுள்ள அரசாங்க திணைக்களங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றுக்குச் செல்ல பாதுகாப்புப் படையினர் அனுமதி மறுக்கின்றனர்.

கொழும்பிலுள்ள அரசாங்க கூட்டுத்தாபன அலுவலகங்கள், திணைக்களங்களுக்கு வடபகுதி இளைஞர்கள் உள்ளே செல்வதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதி கொடுப்பதில்லை.

அரசாங்க ஊழியர்களாக இருந்தாலும் இளைஞர்களாக இருந்தால் அனுமதி வழங்கப்படுவதில்லை இதனால் பலர் ஏமாற்றத்துடன் தமது அலுவல்களை கவனிக்கமுடியாமல் திரும்புகின்றனர். [137]

## வீர வணக்கம்

[யாழ்ப்பாணம்]

மணலாற்றுப் பகுதியில் 6ம் திகதி நடைபெற்ற மோதலில் பிறேம்குமார் [கந்தையா தயாபரன், வரவெட்டி] வீரமரணம் அடைந்தார். 15-7-91 ஆனையிறவு இராணுவ முகாம் பகுதியில் நடைபெற்ற மோதலில் சந்திரன் [நாகராசா நவதாஸ், அச்சுவேலி] வீரமரணமடைந்துள்ளார். இவர்களுக்கு புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

## ராம்-தொண்டா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. ராம் திரு. ஜெயவர்த்தனா, திரு. பிரேமதாசா, திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, திரு எஸ். தொண்டமான், ஜனாப் ஹமீத் ஆகியோரை சந்தித்து பேச்சுக்கள் நடாத்தியிருந்தார்.

இனப்பிரச்சனை தீர்வுமுயற்சியில் இந்தியாவின் திட்டமொன்றை முன்வைத்து திரு. ராம் மேற்படி தலைவர்களுடன் பேசியதாகவும், இதன் ஒரு கட்டமாகவே திரு தொண்டமான் திரு ராமை சந்திக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது. [சி]

## முல்லை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் கஷ்டப்படுவதாகவும் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் கடுமையாக இருப்பதால் படையினர் தாங்கள் நிலைகொண்ட இடத்திலிருந்து பின்வாங்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

காட்டுக் குகைகளைப் பிடிப்பதற்குப் படையினர் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

கரையோரத்திலிருந்து காட்டுப்பகுதிக்குள் நுழைந்த படையினர் காட்டு மரங்களை அப்புறப்படுத்தி அவ்வவ்விடங்களில் நிலைகொண்டிருக்கின்றனர்.

பல விமானங்கள் தொடர்ச்சியாகக் குண்டுவீச்சுத் தாக்குதல்களைக் காடுகளை நோக்கி மேற்கொண்டு வருகின்றன. அப்பகுதியில் தொடர்ந்தும் யுத்தம் நடைபெறுகிறது. [56]

# நல்லூரில் நேற்று சங்கிலித் திருட்டு

[யாழ்ப்பாணம்]

நல்லூர் கந்தன் ஆலய ரதோற்சவத் திருவிழாவான நேற்றுக்காலை 4 தங்கச் சங்கிலிகளும், ஒரு தாலிக்கொடியும் களவு போயுள்ளன.

இதேவேளை 9 கைக்கடிகாரங்கள் காணாமல் போய் பின் அவற்றில் 5 கைக்கடிகாரங்கள் மீண்டும் உரியவர்களிடம் யாழ். மாநகர சபை சுகாதாரப் பிரிவினரால் ஒப்படைக்கப்பட்டன.

வழமையைவிட இம்முறை பக்தர்களின் எண்ணிக்கை மிக அதிகளவில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. (154)

## அகதிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசு தற்காலிக பாதுகாப்பு வழங்கும் என்பது உட்பட இந்தியா சில நிபந்தனைகளை முன்வைத்தது.

இலங்கை அரசு அகதிகளுக்கான தற்காலிக முகாம்களை மன்னாரில் ஐ நா. அகதிகள் தூதராலயத்தினால் திறக்கப்பட்டுள்ள முகாம்களில் தங்க வைப்பதால் அவர்களுக்கு எந்தவிதபாதுகாப்பும் தேவையில்லையென கூறியுள்ளது. [எஸ்]

## க. பொ. த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் இங்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் பரீட்சை ஆணையாளர் உறுதியளித்துள்ளாராம் [152]

## 7-வது மாடி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையகத்தின் 7வது மாடியிலிருந்து குதித்து இவர் தற்கொலைசெய்துகொண்டார்

இவரின் தற்கொலைக்கான காரணமெதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## யாழ. குடா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

'புரண்ட் லைன்' சஞ்சிகை தெரிவித்துள்ளது.

அதுமேலும் தெரிவிக்கையில்: இந்நடவடிக்கை போரில் ஈடுபடும் இருதரப்பிற்கும் எதிர்பாராத அளவில் பெரும் இழப்பு ஏற்படும் என்றும் அவ்வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

இதேவேளைதமிழீழபோராட்டத்தை இராணுவ நடவடிக்கையால் நசுக்கிவிட முடியாதென்றும் இப்போராட்டத்தை ராணுவம் மூலம் குறுகிய காலத்திலோ அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திலோ அடக்கிவிடலாம் என்பது முடியாத காரியமென 'புன்ரட் லைன்' ஆசிரியர் திரு. ராம் தெரிவித்துள்ளார். [சி]

# கொலை சந்தேகநபர்களை அழிக்க முயற்சி?

(சென்னை)

சட்டத்தரணிகள் போல் நடித்து ராஜீவ் கொலை சந்தேக நபர்களை கொல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக இந்திய புலனாய்வுதுறையினர் தெரிவித்தனர்.

ராஜீவ் கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேக நபர்களை ஒழித்துக் கட்டும் முயற்சியில் ராஜீவ் கொலையாளிகள் தற்போது ஈடுபட்டுவருகின்றனராம்.

ராஜீவ் கொலையில் தமது தடயங்களை இல்லாமல் செய்வதற்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை அழிப்பதற்கு கொலையாளிகள் முயற்சிக்கிறார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# நோயாளியை பராமரித்த தமிழ் பெண்ணுக்கு

## கொழும்பில் ஏற்பட்ட அனுபவம்

[யாழ்ப்பாணம்]

கொழும்பு வைத்தியசாலையில் அண்மையில் வடமராட்சியிலிருந்து சிகிச்சைக்காக சென்ற ஒரு நோயாளியின் மகள் அந்நோயாளியோடு கூட நின்று பார்த்தபோது அவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த ஆனையிறவு யுத்தத்தில் காயப்பட்ட இராணுவத்தினரும் மற்றும் அங்கு கடமையாற்றும் சிங்களதாதிய உத்தியோகத்தர் அற்றன்டன் ஆகியோர்கள் 13 நாட்களாக இப்பெண்ணை துன்புறுத்தியும், துப்பாக்கி காட்டி மிரட்டியும் உள்ளனராம்.

இப்பெண் கடும் துன்பங்களையும் வேதனைகளையும் அனுபவித்துவிட்டு ஒருவாறு தப்பி 6ம் திகதி குமண கப்பலில் நோயாளியை ஒரளவு சுகப்படுத்தி அழைத்துவந்தார் [56]

## கண்டனக்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இதேவேளை காமினி, லலித் தின் சதி குறித்து நேற்று முன்தினம் ஐ.தே கட்சியின் 3000 அங்கத்தவர்களைக் கூட்டி ஜனாதிபதி பிரேமதாசா விளக்கமளித்துள்ளார்.

உச்சநீதிமன்றின் தீர்ப்பு கிடைக்கும் வரை தாங்கள் எண்மரும் ஐ. தே. கட்சியின் உறுப்பினர்களாகவும் அதன் எம். பி.க்களாகவும் செயல்பட உள்ளதாகவும் திரு காமினி திஸநாயக்கா தெரிவித்துள்ளார் [153]

## போதனாசிரியர் நியமனம்

(அச்சுவேலி)

யாழ். மாவட்டத்தில் கடமையுரியும் பயிலுநர் ஆசிரியர்களுக்கு தொலைகல்வி ஆசிரியர் பயிற்சி அளிப்பதற்கு 32 பேர் போதனாசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## சென். மேரிஸ் சாம்பியன்

[யாழ்ப்பாணம்)

அமரர் குமரையா ஞாபகார்த்த கிண்ணத்துக்காக யாழ் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடாத்திய உதைபந்தாட்டப்போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் சாம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

இறுதிப்போட்டியில் சென் மேரிஸ் விளையாட்டுக்கழகம் நாவாந்துறை சென். நீக்கிலஸ் கழகத்துக்கு எதிராக 5–1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது இப்போட்டிக்கு திரு எமி. அன்ரனிப்பிள்ளை நடுவராக கடமையாற்றினர். [சி]

## நீதி கோரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கியது தவறென ஆட்சேபித்து விரைவில் சுப்பிரிம் கோட்டில் மனுவொன்றைத் தாக்கல் செய்யவிருக்கிறார்கள்.

இவர்கள் இதுசம்பந்தமாக சட்ட அறிஞர்களுடன் ஆலோசனைகளை நடாத்திவருகிறார்கள். [153]

## மணலாறு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மோதலில் 15 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் மற்றும் இராணுவத்தினர் பலர் பலத்த காயமடைந்ததாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது இப்பகுதியில் கடும்மோதல் நடப்பதாக இராணுவ தளபதி ஹமில்டன் வனசிங்க தெரிவித்துள்ளார். [153]

# விமான தாக்குதல்: பலர் பலியாகினர்?

(யாழ்ப்பாணம்]

முல்லை- மணலாறு மாவட்டங்களில் அரசபடையினரின் வான், பீரங்கி, ஷெல் தாக்குதல்களினால் இருப்பிடங்களை விட்டு வெளியேறும்போது அகப்பட்டு பலர் இறந்திருக்கலாமென்றும் அங்கிருந்து வந்தவர்கள் தெரிவித்தனர்.

குமுழமுனைப் பகுதியிலிருந்து வரும் பெருந்தொகையான மக்கள் விசுவமடுப் பகுதியிலுள்ள பாடசாலை, ஆலயங்கள் மற்றும்பல கட்டடங்களில் அகதிகளாக தங்கியுள்ளனர். இதற்குரிய ஒழுங்குகளை அங்குள்ள சமூகசேவை ஸ்தாபனங்கள், பொது நிறுவன அமைப்புகள் முழுமூச்சுடன் செய்துவருகின்றன. [56]

## இக்கட்டான

[4-ம் பக்கம் பார்க்க]

தெரிவித்துள்ளார்,

இது தொடர்பாக 'புரன்ட் லைன்' சஞ்சிகைக்கு எழுதியகட்டுரையில் அவர் மேலும் தெரிவிக்கையில்; இலங்கையில் ஏற்பட்ட பேச்சுவார்த்தைகளும், ஒப்பந்தங்களும் எதுவித பலனுமளிக்கவில்லை. ஒருவர் மீதுஒருவர் நம்பிக்கை கொள்ளாததே இதற்கு காரணம்.

இப்பிரச்சனையை தீர்க்கக் கூடியதொரு சூழ்நிலையை ஏற்படுத்த இந்தியப்படையினரும் இலங்கைப் படைகளும்படைப் பலத்தைபிரயோகித்தபோதும் அச்சூழ்நிலையை ஏற்படுத்தமுடியாது போய்விட்டது.

பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசு புலிகளுடன் ஏதும் உறவுகளை ஏற்படுத்த வேண்டும். இல்லையேல் புலிகளை இல்லாது செய்யவேண்டும். ஆனால் இதில் எதனையும் செய்யமுடியாத நிலையில் இலங்கை அரசு உள்ளது

இந்தநிலையில் இராணுவச் செலவு அதிகரிக்கிறது. இதனால் நிதி வழங்கும் நாடுகளின் நெருக்குதலும் அதிகரிக்க, நாட்டின் பொருளாதாரத்தை அதற்கேற்ப சரிப்படுத்த அரசு முயல்கிறது. இந்தநிலைதான் தற்போது தொடர்கிறது என்றும் தெரிவித்துள்ளார். [சி]

## இடமாற்றம்

[புங்குடுதீவு]

குறிகாட்டுவான் அமெரிக்க மிஷன் வித்தியாலயம் புங்குடுதீவு ஸ்ரீபராசக்தி வித்தியாசாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளது.

## அரசுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி]

இக் கூட்டத்தில் முன்னாள் ஹபராதுவ எம். பி திரு. பிரின்ஸ் குணசேகரா முக்கிய உரையாற்றினர். (153)

## உயிராபத்து

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றுகையில் இதனைத் தெரிவித்தார்.

தமக்கு எதிராக ஆரம்பித்துள்ள இச்சதி இன்னமும் முடியவில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதேவேளை ஜனாதிபதியின் இக்கூற்றை நிராகரித்துள்ள திரு. லலித் அத்துலத்முதலி எங்களால் அவருக்கு ஏதும் ஆபத்து ஏற்படாது என்றும், ஜனாதிபதி நீண்டஆயுளுடன் வாழவாழ்த்துவதாகவும் தெரிவித்ததாக பி.பி ஸி கூறியது. [சி-153]

## 5-வது மாதாந்த அஞ்சலிப் பிரார்த்தனை

சைவப்பெரியார்

### நயினை செல்லப்பா விசாகப்பெருமாள்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

சைவப்பெரியார் நயினை செல்லப்பா விசாகப்பெருமாள் அவர்களின் 5வது மாதாந்த அஞ்சலிப் பிரார்த்தனை, நல்லூர் மேற்கு வீதி மடத்தில் இன்று 8-9-91 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு நடைபெறும்.

அன்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி 5201]

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு செப்ரெம்பர் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Regestered as a News Paper at the General Postoffice Sri Lanka under Licence Number B/10336/81,